இணைந்த சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் : 03/2026

எனது இலக்கம் : COM/Trans/V/ஒ.சி.ஒ./2026
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2026.05.27

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>இணைந்த சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தல்</u>**

இணைந்த சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்களை பல்வேறு காரணங்களால் நடைமுறைப்படுத்தாமை தொடர்பாக அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் உரிய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களின் மூலம் இணைந்த சேவைகள் பிரிவிடம் வினவப்படுகின்றது. இது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்காக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

02. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் அனுமதிக்கப்பட்ட இடமாற்ற நடைமுறையின் பிரகாரம், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வருடாந்த இடமாற்றச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது. வருடாந்த இடமாற்றச் செயன்முறையின் மூலம் உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு சேவை நிலையங்களுக்கு இடமாற்றம் பெறுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், அதன் மூலம் உத்தியோகத்தர்கள் ஊக்குவிக்கப்படுவதோடு தாபனங்களின் சேவைத் தேவைகளும் நிறைவேற்றப்படுகின்றது.

03. இணைந்த சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றச் செயன்முறையின் பிரதான படிமுறைகள் பின்வருமாறு.

i. இணைந்த சேவைகளிலுள்ள வருடாந்த இடமாற்றச் சுற்றறிக்கையைப் பிரசுரித்தல் மற்றும் அதன் பிரகாரம் விண்ணப்பங்களைக் கோருதல்.

வருடாந்த இடமாற்றச் சுற்றறிக்கையை வெளியிடப்பட்டதன் பின்னர், நிகழ்நிலை (இணையவழி) ஊடாக விண்ணப்பங்களைக் கோருவது மேற்கொள்ளப்படுவதுடன், அச்சந்தர்ப்பத்தில் உரிய தாபனங்களில் சேவைத் தேவையின் அடிப்படையில் தக்கவைத்துக் கொள்வதற்குப் பரிந்துரைக்கப்படும் உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் (விருப்பத்திற்குரிய சேவை நிலையங்களுக்கு இவ்விடயம் பொருத்தமற்றது), பிரசவ லீவு/ சம்பளமற்ற லீவு பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் தகவல்கள் மற்றும் இடமாற்றங்களில் தாக்கம் செலுத்தும் வேறு விசேட விடயங்கள் தொடர்பான தகவல் உள்ளடங்கலாக 05 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களின் பட்டியல், சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இருப்பினும், இங்கு பின்வரும் குறைபாடுகளை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

a. வருடாந்த இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்கும் போது, உத்தியோகத்தரின் தற்போதைய சேவை நிலையம், முன்னைய சேவை நிலையங்கள் மற்றும் காலப்பகுதிகளை சரியாக உள்ளடக்காதிருத்தல்.
b. இடமாற்றம் கோரப்படும் சேவை நிலையங்களைச் சரியாகத் தெரிவு செய்யாதிருத்தல்.
c. தக்கவைத்துக் கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக அறிவிக்காதிருத்தல்.
d. பிரசவ லீவு/ சம்பளமற்ற லீவு பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் விபரங்களை அறிவிக்காதிருத்தல்.

இவ் குறைபாடுகள் காரணமாக, வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் வழங்கப்பட்ட பின்னர், உரிய வருடாந்த இடமாற்ற வட்டத்தில் உள்ள ஏனைய உத்தியோகத்தர்கள் மட்டுமற்றி அச்சேவை நிலையங்களும் பாதிப்புக்குள்ளாகின்றன.

ii. இணைந்த சேவைகளிலுள்ள வருடாந்த இடமாற்றத் தீர்மானங்களை வெளியிடுதல் மற்றும் அத் தீர்மானங்களின் பிரகாரம் மேன்முறையீடுகளைக் கோருதல்.

வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் வெளியிடப்பட்டதன் பின்னர், அத் தீர்மானங்கள் தொடர்பாக திருப்தியடையாத அனைத்து உத்தியோகத்தர்களும் மீளாய்வுக் குழுக்களுக்கு நிகழ்நிலையினூடாக மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

iii. இணைந்த சேவைகளிலுள்ள வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் தொடர்பில் மீளாய்வுக் குழுக்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளை கவனம் செலுத்தி தீர்மானங்களை வழங்குதல் மற்றும் மீளாய்வுக் குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் அதிருப்தியடைந்த உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்தல்.

a. மீளாய்வுக் குழுக்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளை கவனம் செலுத்தி தீர்மானங்கள் வழங்கப்பட்ட பின்னர், அவற்றிலும் திருப்தியடையாத அனைத்து உத்தியோகத்தர்களும் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு நிகழ்நிலையின் மூலம் மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

b. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் எடுக்கப்பட்டுள்ள தீர்மானமொன்றை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதோ அல்லது திருத்தம் செய்வதோ அல்லது ஒத்திவைக்கும் அதிகாரங்கள் வேறு தாபனத் தலைவர்களிற்கு கிடையாது என்பதினால், எவரேறும் உத்தியோகத்தரொருவர் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்யாதுவிடின், அவ் உத்தியோகத்தர் மீளாய்வுக் குழுவின் மூலம் வழங்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் திருப்தியடைந்துள்ளார் என அனுமானிக்கப்படும். அது தொடர்பாக மீண்டும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் மேன்முறையீடு செய்ய இயலாது என்பதுடன், அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீளாய்வுக் குழுவின் தீர்மானத்தை அவ்வாறே நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

c. அத்தோடு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 55(3) இன் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் எடுக்கப்பட்டுள்ள தீர்மானமொன்றை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதோ அல்லது திருத்தம் செய்வதோ அல்லது ஒத்திவைக்கும் அதிகாரங்கள் வேறு தாபனத் தலைவர்களிடமும் இல்லை என்பதினால், வருடாந்த இடமாற்றத் தீர்மானங்களை அவ்வாறே நடைமுறைப்படுத்துவது தாபனத் தலைவர்கள் மற்றும் உரிய உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்.

d. தமது மேன்முறையீட்டிற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்பட்ட தீர்மானத்திலும் அதிருப்தியடையும் உத்தியோகத்தரொருவருக்கு, 2002 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையிடம் மேன்முறையீடொன்றை சமர்ப்பிப்பதற்கு உரித்துண்டு. எனினும், நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் இறுதித் தீர்மானம் கிடைக்கும் வரையில் உரிய இடமாற்றக் கட்டளையை அவ்வாறே நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

e. வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் தொடர்பாக மீளாய்வுக் குழுவிடமோ அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் தமது மேன்முறையீடுகளை சமர்ப்பிக்காது, வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தரின் தனிப்பட்ட தேவைகளையோ அல்லது சேவைத் தேவைகளையோ குறிப்பிட்டு இணைந்த சேவைகள் பிரிவிற்கு மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்க முடியாது.

f. இணைந்த சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றத் தீர்மானங்களை உரிய திகதியில் நடைமுறைப்படுத்தப்படுவது கட்டாயமானதாகும். வருடாந்த இடமாற்றங்கள் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் பதிலாள் வரும் வரை அல்லது வேறு எக் காரணத்திற்காக உரிய வருடாந்த இடமாற்றங்களை ஒத்திவைக்கவோ அல்லது வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தாமல் இருக்கவோ நடவடிக்கை எடுக்கப்படலாகாது என வலியுறுத்தப்படுகிறது.

04. வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்.

i. வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பாக ஏவரேனும் உத்தியோகத்தரொருவர் தனது மேன்முறையீடொன்றினை சமர்ப்பிக்கும் போது, தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XXVIII இன் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம், தமது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

ii. மேலும், தமது தாபனத் தலைவரின் அனுமதியின்றி நேரடியாக மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை கடித இலக்கம் 06/2015 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

iii. இடமாற்றங்கள் தொடர்பாக வேறு தரப்பினர் மூலம் அழுத்தம் கொடுத்தல், தாபனவிதிக்கோவையின் II ஆம் வகுதியின், அத்தியாயம் XLVII இன் 1.6 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய செயலாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

05. அரச சேவையில் பேணப்பட வேண்டிய சட்ட ரீதியான இயல்புகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இணைந்த சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றச் செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்காக, இச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை கவனத்தில் கொண்டு செயற்படுவதற்கு அனைத்து தாபனத் தலைவர்களும் இணைந்த சேவைகளைச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

06. இச்சுற்றறிக்கையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்./என்.யு. நிஷான் மென்டிஸ்
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு